

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நெமிலி வட்டம் நெல்வாய் கிராமத்தைச் சேர்ந்த தமிழரசன் என்கிற இளைஞர் கடந்த ஜனவரி 22ந் தேதி உயிரிழந்ததை அடுத்து ஏழ்மை நிலையில் உள்ள அவரது குடும்பத்திற்கு வீடு கட்ட 3சென்ட் நிலத்திற்கான பட்டா ஆணையினை அந்த இளைஞனின் தாயார் ஜானகியிடம் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் ஜே.யு.சந்திரகலா, மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளனர்.

### லயோலா கல்லூரி வணிக நிர்வாக பயிலகம் சார்பில்

# செயற்கை நுண்ணறிவின் பரிணாமம் - சொற்பொழிவு!

## கே.அசோக்வர்தன் ஷெட்டி ஐ.ஏ.எஸ். (ஓய்வு) சிறப்புரை!

சென்னை, பிப். 11-

லயோலா வணிக நிர்வாக பயிலகம் (LIBA) சார்பில் ‘செயற்கை நுண்ணறி வின் பரிணாமம்’ தொடர்பான சொற்பொழிவு நாளை நடைபெறுகிறது. ஓய்வு பெற்ற முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரியும், இந்தியக் கடல்சார் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தருமான கே.அசோக் வர்தன் ஷெட்டி சிறப்புரை ஆற்றுகிறார் .

லயோலா கல்லூரியில் உள்ள லயோலா வணிக நிர்வாகப் பயிலகச் சார்பில் நாளை (12.2.2025) காலை 9.30 மணியளவில் கல்லூரி வளாகத்தில் கிரைசாலிஸ் (Chrysalis) துவக்க விழா டாக்டர் சேவியர் பிரிட்டோ ஆடிட்டோரியத்தில் நடைபெறுகிறது.

அதில் செயற்கை நுண்ணறிவு பரிணாமம் தொடர்பாக சொற்பொழிவு நடைபெறுகிறது. அதில் கே.அசோக் வர்தன் ஷெட்டி (ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி) பங்கேற்று சிறப்புரை ஆற்றுகிறார்.

இந்நிகழ்ச்சிக்கு வருகை புரிபவர்களை ‘லிபா’ இயக்குநர் மறைதிரு டாக்டர் சி.ஜோ அருண் வரவேற்கிறார்.

### மாநிலத்திற்கு தர வேண்டிய கல்வி நிதியைத் தராமல்

# தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய அரசு!

## அரசு ஊழியர்கள் – ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் கண்டன அறிக்கை!

சென்னை, பிப்.11-

அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் சார்பில் ஒதுக்கிய நிதி ரூ 2152 கோடியை உத்தரபிரதேசம் மற்றும் குஜராத் மாநிலங்களுக்கு மடைமாற்றம் செய்து தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய அரசிற்கு தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் நிறுவனத் தலைவர் சா.அருணன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

ஒன்றிய அரசு அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் சார்பில் ஒதுக்கீடு செய்த சுமார் ரு 2152 கோடியை விடுவிக்காமல் தமிழகத்தை வஞ்சிக்கிறது அதாவது ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள மும்மொழி கொள்கையான புதிய கல்விக் கொள்கையை தமிழ்நாட்டிலும் கொண்டு வர வேண்டும்,



அப்படிக் கொண்டு வந்தால் மட்டுமே நிதியை விடுவிக்க இயலும் என்று தெரிவித்து நிதியை குஜராத்திற்கும் உத்திரபிரதேச மாநிலத்திற்கும் மடைமாற்றம் செய்து ஓர வஞ்சனை செய்துள்ளது

அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் மூலமாக தான் 12 ஆயிரம் பகுதி நேர சிறப்பாசிரியர்கள், ஆசிரியர் பயிற்றுனர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பராமரிப்பு ஆசிரியர்கள் என 15 ஆயிரம் ஆசிரியர்களின் ஊதியம் வகுப்பறை கட்டடங்கள் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், ஆசிரியர்களுக்கான அனைத்து வகை பயிற்சிகள் மேற்கொள்ள இந்த நிதியை தான் பயன்படுத்துகின்றனர் ஆனால் ஒன்றிய அரசு மும்மொழிக் கொள்கையான புதிய கல்விக் கொள்கையை தமிழ்நாட்டில் அமல்படுத்தினால் மட்டுமே விடுவிக்க இயலும் என தெரிவித்து நிதியை உத்திரதேசம் மற்றும் குஜராத் மாநிலங்களுக்கு மடைமாற்றம் செய்து தமிழ்நட்டிற்கு சேர வேண்டிய நிதி ரூ. 2152 கோடியை திருப்பி விட்டுள்ளது, இது எதனால் என்றால் இந்தியையும் சமஸ்கிருத மொழியையும் தமிழ்நாட்டில் கொண்டுவந்து தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் மாணவர்கள் நலனில் தாய் தந்தைக்கு நிகராக காலை உணவு திட்டம் ,மேற்படிப்பில் சாதித்து பல துறைகளில் வேலையாப்பு பெற நான் முதல்வன் திட்டம் , கல்லூரி கனவு , தமிழ் புதல்வன் திட்டம் என பல திட்டங்களை கொண்டு வந்து இந்தியாவின் முதன்மை முதலமைச்சர் என்பதை பறைச்சாற்றுகின்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வடிவமைத்து செயல்படுத்தி வரும் திட்டங்களை தடுத்து நிறுத்தி தமிழ்நாட்டு மாணவர்களையும் இளைஞர்களின் கல்வியை சீரழித்து தமிழ்நாட்டு கல்வித்தரத்தை சிதைக்க ஒன்றிய அரசு ரூ.2152 கோடியை உத்தரிபிதேசம் மற்றும் குஜராத்திற்கு திருப்பி அனுப்பி வஞ்சனை செய்துள்ளது.

மாற்றான் தாய் மனப்பான்மை எண்ணத்தில் பி.எம்.ஸ்ரீ திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு சேர வேண்டிய ரூ. 2152 கோடியை உத்திரபிரதேசம் மாநிலத்திற்கும் குஜராத் மாநிலத்திற்கும் மடை மாற்றம் செய்ததை தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் வண்மையாக கண்டிக்கிறோம் , மேலும் மடைமாற்றம் செய்து உத்திரபிரதேச மாநிலத்திற்கும் குஜராத் மாநிலத்திற்கும் ஒதுக்கப்பட்ட நிதியை திரும்ப வழங்கவேண்டும்.

இவ்வாறு சா.அருணன் தெரிவித்துள்ளார்.

### முதல்வர் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு

## சென்னை தென் மேற்கு மாவட்டம், தி.மு.க. சார்பில் கழக ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ அறிவிப்பு!



சென்னை தென்மேற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (11.02.2025 - செவ்வாய்க் கிழமை அன்று மாலை 5.00 மணியளவில் சர்பீட்டி, தியாகராஜர் ஹாலில் மாவட்ட அவைத்தலைவர் அ. சந்திரசேகர் தலைமையில் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., கே.ஏழுமலை, நந்தனம் மதி, எஸ்.முரளி பகுதிசெயலாளர்கள் முன்னிலையில் நடைபெற உள்ளது.

எனவே, இக்கூட்டத்தில், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், தொகுதி பொறுப்பாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டச்செயலாளர்கள். வட்ட நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 01.03.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் – கழக தலைவர் தளபதி அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நிகழ்ச்சிகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குவது குறித்து

**மயிலை த.வேலு எம்.எல்.ஏ.**
செயலாளர், சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க.



சென்னை தியாகராயர் நகரில் நேற்று (10.2.2025) நடைபெற்ற கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு தின விழாவில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் கொத்தடிமை தொழிலாளர் மீட்புப் பணியில் சிறப்பாக பணிபுரிந்த கள அலுவலர்களுக்கு கேடயம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அரசு செயலாளர்கொ.வீர ராகவ ராவ், தொழிலாளர் நல ஆணையர் சி .அ. ராமன், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை இயக்குநர் எஸ். ஆனந்த், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றப்பிரிவு காவல் துறை தலைவர் திருமதி கயல்விழி, தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு துணை செயலாளர் /சார்பு நீதிபதி திருமதி ச.வேங்கட லட்சுமி, சென்னை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு செயலாளர்/முதுநிலை சார்பு நீதிபதி எஸ் செந்தில் பாபு, காவல்துறை துணை ஆணையர் திருமதி ஜி வனிதா, கூடுதல் தொழிலாளர் ஆணையர்கள், இணை ஆணையர்கள், மற்றும் அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கடலூர் மேற்கு மாவட்டத்திற்குப் புதிதாக நியமிக்கப்பட்ட ஒன்றிய நகர பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுக்கான அறிமுகக் கூட்டம். கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி ஏற்பாட்டில் நெய்வேலி தொ.மு.ச அலுவலகம் கலைஞர் அரங்கில் நடைப்பெற்றது. இதில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ்.கணேஷ்குமார் வரவேற்புரை ஆற்றினார். மாநில இளைஞரணி துணை செயலாளர் அப்துல்மாலிக் முன்னிலை வகித்தார்.கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் சி.வெ.கணேசன் கலந்துகொண்டு ஆற்றவேண்டிய கழகப்பணிகள் குறித்த ஆலோசனைகளை வழங்கினார். இதில் துரைராஜ்,ராஜேஷ்,நாராயணசாமி, சதாம்,பாரதிராஜா உள்ளிட்ட நகர, ஒன்றிய, பேரூர் அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள் திரளாக கலந்துகொண்டனர்.

### டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன் தலைமை! சபா.இராசேந்திரன் எம்.எல்.ஏ., முன்னிலை!

# கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## அமைச்சர் சி.வெ.கணேசன் சிறப்புரையாற்றினார்!

கடலூர், பிப்.11-

கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம், 08.02.2025, ஞாயிற்றுக்கிழமை, மாலை 4 மணியளவில், நெய்வேலி தொ.மு.ச கலைஞர் அரங்கத்தில், மாவட்ட கழக அவைத் தலைவர் டாக்டர் கொ.நந்த கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராசேந்திரன் முன்னிலை வகித்தார்.

கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளரும், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் சிறப்புரை யாற்றினார்.

கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வருகின்ற பிப்ரவரி 21,22 ஆம் தேதி கடலூர் மேற்கு மாவட்டத்திற்கு வருகை தந்து பல்வேறு திட்ட பணிகளை ஆய்வு செய்யவும், முடிவுற்ற திட்டங்களை துவக்கி வைக்கவும், பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கவும், மாநில பெற்றோர் ஆசிரியர், கழக மாநாட்டு நிறைவு விழாவிற்கும் மற்றும் கழகத்தினருடன் கலந்துரையாடல் செய்து வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் 200 தொகுதிகளுக்கு மேல் நமது கழகமும் கூட்டணி கட்சி வேட்பாளர்களும் வெற்றி பெறுகின்ற வகையிலும், கழக வளர்ச்சி பணியினை சிறப்பாக மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கிடவருகை தரும் திராவிட மாடல் நாயகன், கழக தலைவர், முதல்வர் தளபதி அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளித்திட இந்நாள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் முன்னாள் இந்நாள் நிர்வாகிகள், தொமுச நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதி கள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் பெருந்திரளாக பங்கேற்று தளபதி அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டுமென இச் செயற்குழு தீர்மானிக்கிறது.

வருகின்ற மார்ச் 1ம் தேதி 72வது பிறந்த நாள் காணும் தமிழகத்தில் நாடு போற்றும் நல்லாட்சி நடத்தி வரும், இந்தியாவின் நம்பர் ஒன் முதல்வர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் பிறந்த நாளை, கடலூர மேற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் ஊராட்சிகள், மற்றும் கிளை கழகத்தின் சார்பில் சிறப்பாக கொண்டாடுகின்ற வகையில் கழக இரு வண்ணக் கொடி ஏற்றி, இனிப்புகள் வழங்கியும், நலத்திட்ட உதவிகள் வழங்கியும், மற்றும் மருத்துவ முகாம்கள் நடத்திட சிறப்பு வாய்ந்த இந்நிகழ்ச்சியில் அனைத்து சார்பு அணிகளும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென இக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

வருகின்ற 2026 இல் நடைபெறும் உள்ள சட்டமன்ற தேர்தலில் நமது கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சூலுரையான “வெல்வோம் 200 படைப்போம் வரலாறு” என்ற கூற்றினை மெய்ப்பிக்கின்ற வகையில் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிகளிலும் உள்ள வாக்குச்சாவடிக்கும், ஏற்கனவே முடிவு செய்தபடி வாக்குச்சாவடி முகவர்களை நியமிக்க ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளைக் கழகச் செயலாளர்களை இச் செயற்குழு கேட்டுக் கொள்வதோடு, அதன் விபரம் அடங்கிய பட்டியலை மாவட்ட கழகத்திற்கு உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும் எனவும் இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

இக்கூட்டத்தில்தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வி.கே.வெங்கட்ராமன், பாவாடை கோவிந்தசாமி, பொதுக்குழு உறுப்பினர்கள் என்.பலராமன், கே.அறிவழகன், பொ.புகழேந்தி ஆர். பாலகிருஷ்ணன், ஆர்.ராதாகிருஷ்ணன், க.ராஜேந்திரன், செந்தமிழ்செல்வி கருப்புசாமி, ஒன்றிய கழக செயலாளர்கள் பட்டூர் வி.அமிர்தலிங்கம், பா.செங்குட்டவன், த.சின்னசாமி, சிவ.தியாகராஜன், கனக.கோவிந்தசாமி, தி. வேல்முருகன், ஆசைத்தம்பி பா. சுரேஷ், ஆ.குணசேகரன், இரா.சந்தோஷ்குமார்,

நகரச் செயலாளர்கள் கே.ராஜேந்திரன், பா.மணிவண்ணன், க.தண்டபாணி, வி.குருநாதன், பரமகுரு, பேரூர் கழக செயலாளர்கள் ஆர்.சுந்தரவடிவேல் வ.ஜெயமூர்த்தி, சி.செல்வம், எம்.எஸ்.கணேஷ்குமார், க. ராமு, சதீஷ்குமார், அருள்குமார், பாரி இப்ராஹிம், வழக்கறிஞர் மதனகுரு, ஜி. ஆனந்த்,ஜெயந்தி நடராஜன், சேதுராமன், அன்சரலி, முகமது யூசுப், செந்தில்குமார், தங்க.அன்பழகன், சாமிநாதன், இந்துமதி, ஆர். ராஜேஷ், பூ.அரங்கநாதன், டி.குணா, க.சேகர், கோனூர் பூ.மதியழகன், ராஜேஷ், தங்க.நாராயணசாமி, துரை ராஜ் ,சதாம் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கனிமொழி சுரேஷ் எம்.சி. தலைமையில் – எஸ்.நந்தகோபால் முன்னிலையில்

# மாதவரம் 28வது வார்டில் ரூ.1.49 கோடியில் விளையாட்டு மைதானம்!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார்!

சென்னை, பிப். 11-

சென்னை மாதவரம் மண்டலம் 3, 28வது வார்டுக்கு உட்பட்ட கொல் கட்டா ஷாப் தொருவில் மாநகராட்சிக்கு சொந்தமான 3,465சதுர மீட்டர் கொண்ட விளையாட்டு மைதானம் சென்னை மாநகராட்சி மூலதன நீதி 1.49 கோடி செலவில் துவக்கி வைக்கப்பட்டது.

இங்கு கால்பந்து,கைப்பந்து,கபடி விளையாட்டு தளம், உடற்பயிற்சிக் கூடம்,சிறுவர் பூங்கா மற்றும் அலங்கார விளக்கு சுற்றுச்சுவர் என்று நவீனமாக சீரமைக்கப்படுகிறது.

இதன் துவக்க விழா மாமன்ற உறுப்பினர் கனிமொழி சுரேஷ் தலைமையில் நடைப்பெற்றது.

மண்டல குழு தலைவர் நந்தகோபால் முன்னிலை வகித்தார்.

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம்எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி பணியை துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் கவுன்சிலர் - சென்னை வடகிழக்கு மாவட்ட துணை செயலாளர் டி. ராமகிருஷ்ணன், உதவி ஆணையர் திருமுருகன் ,உதவிபொறியாளர் உஷாராணி மற்றும் தி.மு.கழக நிர்வாகிகள், காங்கிரஸ், கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தைகள், புரட்சி பாரதம், மற்றும் பி.எஸ்.பி. உள்பட அனைத்துக் கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் மாணவ,மாணவிகள் ஊர் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

### மண்டலம் 10 – 8 பகுதிகளில்

# கழிவுநீர் உந்து குழாய் இணைக்கும் பணி!

## சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை, பிப் 11-

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL) மண்டலம் - 10 (கோடம்பாக்கம்) -க்குட்பட்ட கோயம்பேடு காளியம்மன் கோயில் தெருவில், கழிவுநீர் உந்துகுழாய் இணைக்கும் பணிகள் மேற்கொள்வதால் 12.02.2025 நாளை காலை 09.00 மணி முதல் 13.02.2025 இரவு 9.00 மணி வரை (36 மணி நேரம்) மண்டலம் - 8 (அண்ணா நகர்) - க்குட்பட்ட A, B, C கழிவுநீர் உந்து நிலையம் மற்றும் என்.வி.என் நகர் கழிவுநீர் உந்து நிலையங்கள் தற்காலிகமாக செயல்படாது.

எனவே, மண்டலம் - 8 (அண்ணா நகர்) - க்குட்பட்ட கீழ்கண்ட தெருக்களில் கழிவுநீர் தொடர்பான புகார்களுக்கு கீழ்க்காணும் பகுதி அலுவலர்களை தொடர்பு கொள்ளவும்.

மண்டலம் / வார்டு, பகுதிப் பொறியாளர் / உதவி பொறியாளர் கைபேசி எண்கள், தெருக்கள் வருமாறு

அண்ணா நகர் / வார்டு எண்.99, கைபேசி எண்கள் 8144930908, 8144930099 - ‘J’ பிளாக், ‘H’ பிளாக், ‘I’ பிளாக், கம்பர் குடியிருப்பு, தென்றல் காலனி, வசந்தம் காலனி,

‘AF’ பிளாக், ‘Z’ தொகுதி, மலர் காலனி, முல்லை நகர், ‘G’ பிளாக், ‘W’ பிளாக், ‘L’ பிளாக், N.V.N நகர்.

அண்ணா நகர் / வார்டு எண்.100, கைபேசி எண்கள் 8144930908, 8144930100 - ‘AH’ பிளாக், ‘AI’ பிளாக், ‘AJ’ பிளாக், ‘AF’ பிளாக், ‘AL’ பிளாக், ‘AE’ பிளாக், ‘AD’ பிளாக், ‘AC’ பிளாக், ‘AB’ பிளாக், ‘AA’ பிளாக்.

அண்ணா நகர் / வார்டு எண்.101, கைபேசி எண்கள் 8144930908, 8144930101 - ‘A’ பிளாக், ‘B’ பிளாக், ‘C’ பிளாக், ‘E’ பிளாக், ‘F’ பிளாக், ‘H’ பிளாக், ‘I’ பிளாக், ‘J’ பிளாக், ‘K’ பிளாக், ‘M’ பிளாக், ‘N’ பிளாக், ‘O’ பிளாக், ‘P’ பிளாக், ‘Q’ பிளாக், ‘W’ பிளாக், ‘D’ பிளாக்.

அண்ணா நகர் / வார்டு எண்.102, 8144930908, 8144930102 - ‘G’ பிளாக், ‘L’ பிளாக், R.V நகர், V.O.C நகர்.

இவ்வாறு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் தெரிவித்துள்ளது.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதிக்கு உட்பட்ட திருத்தணி ஒன்றியம் கே.ஜி.கண்டிகை ஊராட்சியில் சோளிங்கர் சாலையில் உள்ள தலையாறு தாங்கல் முதல் பீரகுப்பம் வரை இரண்டு வழி பாதையை நான்கு வழி பாதையாக முதலமைச்சரின் சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சாலை 26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலை விரிவாக்க பணியே திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி சட்டமன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ்.சந்திரன் பணியை தொடங்கி வைத்தார். உடன் நெடுஞ்சாலை கோட்ட பொறியாளர் ரகுராமன் திருத்தணி கிழக்கு ஒன்றிய செயலாளர் கே.ராஜேந்திரன், உதவி பொறியாளர் அருள்ராஜ் நிர்வாகிகள் சிரஞ்சீவிலு, ஆறுமுகம், கோபி, பாலகிஷ்ணன், முனுசாமி, ரமேஷ், சந்திரசேகர், குப்பையை, ஹரிபாபு, ராம்குமார், சத்தியநாதன், கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பொதுமக்கள் பலர் உள்ளனர்.